மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
திருக்கழுக்குன்றம்

அ.வ.எண்.161/2014

PW 1

பெயர் : ராமு, த/பெ.கண்ணப்பன் நாள் 18.10.2022

**வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இவ்வழக்கில் வாதி தரப்பில் 22 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதில் வா.சா.ஆ.1, 2, 4, 5, 8, 13, 15, 16, 17, 18 ஆகிய ஆவணங்கள் ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தள்ளுபடி உத்தரவு பிறப்பித்துள்ளது என்றாலும் அதன் மீது நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சிலவற்றை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.20 ல் கண்ட வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா 2008 ம் வருடம் இறந்துவிட்டார். என் அப்பா ஊரில் இருந்தபோது தன்னுடைய கையெழுத்தை ஏமாற்றி வாங்கியதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1 வது பிரதிவாதிக்கு சொத்தை விற்ற பிறகு தான் பொது அதிகார பத்திரத்தை நான் ரத்து செய்தேன் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி மீது பார்கவுன்சிலில் கொடுத்த புகார் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை 2013 ம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி என் பெயரில் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் கண்ட அ.வ.எண்.52/2006 வழக்கு தான் 1 வது பிரதிவாதி தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதிகள் தெரிந்தே

நான் இவ்வழக்கை தாமதமாக தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா உரிய பிரதிபலன் பெற்றுக்கொண்டு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் என் அப்பா உயிரோடு இருந்த காலம் வரை அந்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய கோரவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா தான் ரத்து செய்தார். அந்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி கம்பெனி வைத்து நடத்துகிறார் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.